சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.400/2021

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சர்தார் | தொழில் | வியாபாரம் |
| தந்தை பெயர் | அனிப்பாஷா | ஜாதி | |
| கிராமம் | தேவிகாபுரம் | சமயம் | |
| தாலுக்கா | சேத்பட் | வயது | 49 |

**13.03.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். (ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)